# மே - 29 - திங்கள்

### புனித சிறில்

### “உலகில் உங்களுக்கு துன்பம் உண்டு எனினும் துணிவுடன் இருங்கள்” (யோவா.16:33)

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 19 : 1 – 8

அக்காலத்தில் அப்பொல்லோ கொரிந்தில் இருந்தபோது பவுல் மலைப்பாங்கான பகுதி வழியாக எபேசு வந்தார். அங்கு அவர் சில சீடர்களைக் கண்டு, அவர்களை நோக்கி, ”நீங்கள் நம்பிக்கை கொண்டபோது தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட் டீர்களா?” என்று கேட்டார். அதற்கு அவர்கள், ”தூய ஆவி என்னும் ஒன்று உண்டு என்றுகூட நாங்கள் கேள்விப்பட்ட தில்லையே” என்றார்கள். ”அவ்வாறெனில் நீங்கள் எந்தத் திருமுழுக்கைப் பெற்றீர்கள்?” எனப் பவுல் கேட்க, அவர்கள், ”நாங்கள் யோவான் கொடுத்த திருமுழுக்கைப் பெற்றோம்” என்றார்கள். அப்பொழுது பவுல், ”யோவான் மனம் மாறிய மக்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்து, தமக்குப் பின்வரும் இயேசுவிடம் நம்பிக்கை கொள்ளுமாறு கூறினார்” என்றார். இதைக்கேட்ட மக்கள் ஆண்டவராகிய இயேசுவின் பெயரில் திருமுழுக்குப் பெற்றனர். பவுல் அவர்கள் மீது கைகளை வைத்ததும், தூய ஆவி அவர்கள் மேல் இறங்கியது. அப்பொழுது அவர்கள் பரவசப்பேச்சு பேசினர் இறைவாக்கும் உரைத்தனர். அங்கு ஏறக்குறைய பன்னிரண்டு பேர் இருந்தனர். பின்பு பவுல் தொழுகைக்கூடம் சென்றார். அங்கு அவர் மூன்று மாதங்கள் இறையாட்சிபற்றித் துணிவுடன் மக்களோடு பேசி அவர்களோடு விவாதித்து அவர்களை நம்பச் செய்தார்.

**பதில்பாடல் :** உலகிலுள்ள அரசர்களே கடவுளைப் புகழ்ந்தேத்துங்கள்

## நற்செய்தி : யோவான் 16 : 29 – 33

அக்காலத்தில் சீடர்கள் இயேசுவிடம், ”இப்போதுதான் உருவகம் எதுவுமின்றி வெளிப்படையாகப் பேசுகிறீர். உமக்கு அனைத்தும் தெரியும். யாரும் உம்மிடம் கேள்வி கேட்கத் தேவையில்லை என்பது எங்களுக்கு இப்போது புரிகிறது. இதிலிருந்து நீர் கடவுளிடமிருந்து வந்தவர் என்பதை நம்புகிறோம்” என்றார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, ”இப்போது நம்புகிறீர்களா! இதோ! காலம் வருகிறது ஏன், வந்தேவிட்டது. அப்போது நீங்கள் சிதறடிக்கப்பட்டு ஒவ்வொருவரும் அவரவர் வீட்டுக்கு ஓடிப்போவீர்கள் என்னைத் தனியே விட்டு விடுவீர்கள். ஆயினும் நான் தனியாய் இருப்பதில்லை. தந்தை என்னோடு இருக்கிறார். என் வழியாய் நீங்கள் அமைதி காணும் பொருட்டே நான் இவற்றை உங்களிடம் சொன்னேன். உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றி கொண்டுவிட்டேன்” என்றார்.

**தியானம் :** இறைமகன் இயேசுக்கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டு நாம் அனைவரும் அவருக்கு சாட்சிகளாக வாழ அழைக்கப்பட்டவர்கள். எம் அனைவரது வாழ்விலும் துன்பங்களும், இன்பங்களும் இரண்டறக் கலந்துள்ளன. ஆனாலும் மனம் தளர்வுறாது நிலைத்திருங்கள், உங்களோடு நான் இருக்கின்றேன் என்று இயேசு கூறுகிறார். “கடவுள் எமக்கு அடைக்கலமும் ஆற்றலுமாய் இருக்கின்றார் எமது இடுக்கண் வேளையில் உற்ற துணையும் அவரே”(தி,பா,46:1) என்பதையும், குறிப்பாக இன்றைய முதல் வாசகத்தில் வெறுமனே நீரினால் கொடுக்கப்பட்ட திருமுழுக்கு தூய ஆவியானவரின் அனுபவத்தை தராவிடில் அது பயனற்றது, எனக்கூறி எபேசு நகரில் இருந்த விசுவாசிகளுக்கு பவுல் ஆவியினால் திருமுழுக்குக் கொடுத்ததையும் நாம் பார்க்கின்றோம். நற்செய்தியில் இயேசு தமது அன்புச் சீடர்களை வரவிருக்கும் சோதனை நிறைந்த காலத்திற்கு தயார்படுத்துகின்றார். உலகில் உங்களுக்கு துன்பம் உண்டு எனினும் துணிவுடன் இருங்கள் நான் உங்கள் மீது வெற்றி கொண்டு விட்டேன். (யோவா. 16:33) என்று கூறுகின்றார். இறைமகன் இயேசு நம்முடைய மனித பலவீனங்களை நன்கு அறிந்ததனால் எம்மை அனைத்து தீமைகளிலிருந்து மீட்டுக்கொள்ள தமது தூய ஆவியானவரை எமக்கு அருளினார். அந்த ஆவியானவரின் வல்லமையால் இவ்வுலக துன்ப துயரங்களை ஜெயித்து வாழ வரம் வேண்டுவோம். நமது இறுதி மூச்சு உள்ளவரை இறைமகன் இயேசுவிற்கு சாட்சிகளாய் வாழ்வோம்.